# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 87/2017 ராம்ராஜ் (பிசா1) தேதி:09.12.2024**

**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கின் 7ம் பிரதிவாதி முத்து என்பவர் என் தந்தை என்றால் சரிதான். எனது தந்தையின் பவர் ஏஜெண்ட் என் ற முறையில் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் M.E படிப்பு படித்துள்ளேன். நான் ஓசூரில் உள்ள தனியார் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியும். தாவாசொத்துக்கள் முழுவதும் ஆதியில் குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். குருசாமி நாயக்கர் 2000 வருடத்தில் இறந்துவிட்டார். குருசாமி நாயக்கரின் மனைவியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். குருசாமி நாயக்கருக்கு 1ம் பிரதிவாதி வரதராஜன், 2ம் பிரதிவாதி சங்கரப்பன், மற்றும் இறந்துபோன ராமசுப்பு ஆகியோர் 3 ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். குருசாமி நாயக்கருக்கு பெண் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் இவ்வழக்கின் 1ம் வாதி ராமலட்சுமி, இறந்துபோன சீனியம்மாள், மாரியம்மாள் மற்றும் சுப்பாலட்சுமி ஆகிய 4 பெண்வாரிசுகள் என்றால் சரிதான். குருசாமி நாயக்கர் உயிருடன் இருந்தபோதே அவரது 4 பெண் மக்களுக்கும் அவர்களது திருமணத்தின்போதே தேவையான சீர்வரிசைப்பொருட்கள், நகைகள் போட்டுவிட்டதால் அந்த 4 பெண்மக்களும் குருசாமி நாயக்கரின் 3 ஆண்மக்கள் பெரில் தங்களது பாகத்தை பொறுத்து வாய்மொழியாக விட்டுக்கொடுத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு அவர்கள், எந்த வருடம், மாதம், தேதியில் விட்டுக்கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், அதுபற்றி எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். குருசாமி நாயக்கரின் 3 ஆண்மக்களும் தாவாசொத்துக்களையும், இதரசொத்துக்களையும் வாய்மொழியாக பாகம் செய்துகொண்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த பாகம் என்பது எந்த வருடம், மாதம், தேதியில் நடந்ததாக எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். குருசாமி நாயக்கரின் ஆண்வாரிசுகள் எந்தெந்த சொத்துக்களை

பொறுத்து பாகம் செய்துகொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் மூவரும் மொத்தம் எத்தனை ஏக்கர் சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த பாகப்பிரிவினையில் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்து ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.அந்த பாகப்பிரிவினையில் ராமசுப்பு பாகத்திற்கு சர்வே எண். 24/2, 25/3 ஏ 2 ஏ, 25/3 பி, 25/2 ல் உள்ள 10 ஏக்கர் 50 செண்ட் கிடைத்ததாக எனது தரப்பு எதிர்வழக்குரையில் எந்த அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ராமசுப்பு விடம் எனது தந்தை முத்து சொத்து சம்பந்தமாக பேசியபோது ராமசுப்பு தான் அவ்வாறு என் தந்தையிடம் தெரிவித்தார். மேற்படி விவரம் எனது தந்தைக்கு தான் தெரியும் என்றாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.